3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி- கன்னியாகுமரி ரயில் பாதையை திருவனந்தபுரம் டிவிஷனிலே சேர்க்கப்படுவது தமிழக மக்களுடைய வேலை வாய்ப்பை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்பு என்றால் அதை யெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்கள் வேறு அலுவலுக்கு செல்வதற்கு முன்னதாக தங்களிடத்திலே ஒரு உதவியை நாடுகிறேன். 23 ஆம் தேதி நான் பேசியபோது எரிசாராயம் வெளிமாநிலங்களுக்குக் கடத்தப்பட்டது சம்பந்தமாக சிலப் புகார் களைக் கூறினேன், அப்போது நம்முடைய ரெவின்யூ எக்சைஸ் துறை அமைச்சர் அவர்கள் அவையிலே அது சம்பந்தமான கோப்பு களையும் விவரங்களையும் கொடுப்பதாகக் கூறினார்கள். தமிழ் நாட்டிலிருந்து ஆந்திரத்திற்கும், கர்நாடகத்திற்கும், கேரளாவிற்கும் கோவாவிற்கும் கடந்த 8 மாத காலத்திலே போயிருக்கிறது என்று அறிகிறோம். அமைச்சர் அவர்கள் அந்தக் கோப்புகளை இங்கே வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. தங்களுடைய அறையில் வைத்தால் கூட நாங்கள் பார்க்கலாம்.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அதைப்பற்றி அன்றைய தினமே கேட்டிருக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நாளைக்கு முதலமைச்சரின் பதில் வருகிறது. அதற்கு முன் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரிடம் சொல்லி கேட்கச் சொல்லியிருக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இன்றைக்கு சாயந்தரம் முடிந்தாலும் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுப்பற்றி நேற்று முன் தினமே கொடுத்திருக்கலாம் : அப்படியில்லாமல் இன்றைக்கு உறுப் பினரவர்கள் சொல்கிறார்கள்.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 பிபரவரி 2]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அமைச்சரவர்கள் இண்டர்வீன் செய்து பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்படியில்லாததால் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுத்து மூலமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஹவுசில் சொன்னதற்கு ஹவுசில் தான் கொண்டு வர முடியும்; இங்குதான் எங்களுக்கு புரொடெக்ஷன் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுப்பற்றி என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குச் சொல்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பெற்றிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். ''அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருப்பது குறித்தும், ஆசிரியர்கள் கைது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, திருவாளர்கள் ரா. உமாநாத், ப. நெடுமாறன், ஆர். சுந்தரமூர்த்தி, எஸ். ஆண்டித்தேவர், நா. சுந்தரராஜ், எஸ். இராமலிங்கம், மு. அப்பாதுரை செ. சிவசாமி, எம். ஆறுமுகம், சே. அழகர்சாமி, ஆர். கருப்பையா, பி, உத்திராபதி, தி கா. நல்லப்பன், என், எஸ், வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராசன், ரா. கிருஷ்ணன், டி. மணி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. ரா. உமாநாத் அவர்கள் பேசுவார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, இது மிகவும் ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால்தான் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று பலதடவைகள் உங்களை வற்புறுத்தினேன். இன்றைக்கு அனுமதித்திருப்பதற்காக மிக்க நன்றி. இன்று இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அநேகமாக பல்கலைக்கழகம் பூராவும் மாணவர்கள் அன்றி, புரோ—சான்சலர், வைஸ்—சான்சலர் அன்றி, ஹெட் ஆஃப் டிபார்ட்மெண்ட்ஸ் அன்றி சமையல் அறை உள்பட சிறையில்தான் என்றால் அது மிகையாகாது என்று நான் சொல்வேன். இப்பொழுதுகூட போராட்டம் முடியவில்லை; பிக்கெட்டிங்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது ஆகவே கைது நிறுத்தப்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS